# பெயர்ச்சொல் வகைகள்

## பெயர்ச் சொல்லென்பது யாது?

உலகிலுள்ள பொருள்களின்/உயிர்களின் பெயர்களைக் கூறுவன பெயர்ச்சொல் எனலாம்.:-

I. பண்புப் பெயர்:

ஒரு பொருளின் குணத்தை, வடிவத்தை, சுவையை, நிறத்தை, சொல்வனவெல்லாம் பண்புப் பெயர்களாம். -

எடுத்துக்காட்டு:-

- வெண்மை, வட்டம், துவர்ப்பு

www.tamilgk.com

II. ஆகுபெயர்:-

ஒரு சொல் அதன் பொருளைக் குறிக்காமல் அதனொடு தொடர்புடைய பொருளைக் குறிப்பது ஆகுபெயர். இந்த ஆகுபெயர் 19 வகைப்படும். பெரும்பாலும் வழக்கில் பயன்படுத்தப்படுபவை பொருளாகுபெயர், இடவாகுபெயர், பண்பாகுபெயர், உவமையாகுபெயர், தானியாகுபெயர் ஆகிய ஐந்தே.:-

- "தாமரை போன்ற சேவடி - மலரை மட்டுமே சுட்டுகிறது"
  "அனிச்சம் போன்றவர் - மலரைக் குறிக்கிறது"
  "நகர் வென்றது - நகர்வாழ் மக்களை குறிக்கிறது"
  "வெள்ளை அடித்தான் - வெண்மையான சுண்ணம் குறிக்கிறது"
-

  "பாவை வந்தாள் - சிலைபோன்ற பெண்ணைக்

குறிக்கிறது"
"வஞ்சி வந்தாள் - வஞ்சிக் கொடியனைய பெண்ணாகும்"

III. வினையாலணையும் பெயர்:-

வினைமுற்றைப் போலிருக்கும் ஆனால் பெயர்சொல்லாக பயன்படுத்தப் பட்டிருக்கும். இச்சொல்லே வினையாலணையும் பெயர். "அவர் அறிந்தவர்" - இத்தொடரில் "அறிந்தவர்" வினைமுற்று. "அறிந்தவர் பரிசு பெறுவர்" - இத்தொடரில் "அறிந்தவர்" பெயர்ச்சொல்லாக பயன்படுகிறது.

- எடுத்துக்காட்டு:
  "வித்தோன் மருக"
  "வள்ளியோர்ப் படர்ந்து",
  "தமது பகுத்துண்ணும்",
  "பொறுத்தானோடு ஊர்ந்தானிடை",
  "மிச்சில் மிசைவான்", "
  "தப்பியர் அட்ட களத்து",
  "கொடுப்பது அழுக்கறுப்பான்",
  "எண்ணிய எண்ணியாங்கு",

www.tamilgk.com

IV. தொழிற் பெயர்:-

ஒரு செயலை உணர்த்தக் கூடிய காலங் காட்டாத பெயர்ச்சொல் தொழிற்பெயர் என வழங்கப் படும். இது முதனிலைத் தொழிற் பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயரென இருவகைப்படும். முதனிலைத் தொழிற்பெயர் - (எ-கா) - எண் உரைத்திட வாரீர்
இதில் எண்ணம் என்ற தொழிற்பெயர் எண்ணென்ற முதனிலையோடு வந்தது. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் -

(எ-கா) - கெடுதல் என்னும் தொழிற்பெயரின் முதனிலையான கெடு என்பது திரிந்த்து கேடு என்று வரின் அ்ஃதெ முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

+
+++
+++++
+++
+

www.tamilgk.com